பத்திரிக்கைச் செய்தி

செய்தி வெளியீட்டு எண்: நாள்:28.10.2026

திருநெல்வேலி மாவட்டம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த மோகன் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளைத் தடுக்கும் நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிட செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் கணக்கியல் உதவியாளர்(Accounts Assistant) :1மற்றும் தரவு நுழைவு பணியாளர் -1 (Data Entry Operator) பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு விண்ணப்பங்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் https://tirunelveli.nic.in/ என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கு தகுதியான உரிய ஆவணங்களின் நகல்களுடன் மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மணிமுத்தாறு வளாகம் முதல் தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு நவம்பர் 13ம் தேதிக்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்

திருநெல்வேலி

இணைப்பு -1

திருநெல்வேலி மாவட்டம் , சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் அதிகார மையம் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிடவும் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட மையத்தில் கணக்கியல் உதவியாளர் (Account Assistant) மற்றும் தரவு நுழைவு பணியாளராக (Data Entry operator) பணிபுரிய கீழ்க்கண்ட நிலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட பணியிடங்களுக்குத் தகுதியான நபர்கள், திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	பதவி	காலிப் பணியிடம்	படிப்பு & முன் அனுபவம்	சம்பளம்
1	கணக்கியல் உதவியாளர் (Account Assistant)	1	கணக்கியல் (அகௌண்ட்ஸ்) - ஐ பாடமாக்க் கொண்டு ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு / பட்டயம் மற்றும் 3 வருடம் அரசு, தொண்டு நிறுவனம் மற்றும் தனியார் துறைகளில் கணக்கியல் (அகௌண்ட்ஸ்) பிரிவில் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.	ரூ-20,000/-
2	தரவு நுழைவு பணியாளர் (Data Entry Operator)	1	ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு மற்றும் கணினி அறிவு. மேலும் 3 வருடம் அரசு, தொண்டு நிறுவனம் மற்றும் தனியார் துறைகளில் தகவல் தொழில் நுட்பத்தில் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.	ரூ-20,000/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மாவட்ட சமூகநல அலுவலர்,

மாவட்ட சமூகநல அலுவலம்,

மணிமுத்தாறு வளாகம் முதல் தளம்,

மாவட்ட ஆட்சியர் வளாகம்,

திருநெல்வேலி மாவட்டம்.